





திராவிட மாடல் அரசு

# ஆதிதிராவிட மக்களுக்கு அரணாகத் திகழ்கிறது!

## மாவட்ட ஆலோசனைக் கூட்டத்தில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பேச்சு

திருவள்ளூர், டிச. 4-

திமுக ஆதிதிராவிட நலக்குழு அணி சார்பில் ஒருங்கிணைந்த கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் வால்பாறை பகுதியில் ஆதிதிராவிடர் நலக்குழு அணி மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுமுகம் வரவேற்றார். மாநில இணைச் செயலாளர்கள் வி.பி.ராஜன், புஷ்பராஜ், மருதூர் ராமலிங்கம், கொடநாடு பொன் தோஸ், இ.ராசேந்திரன், மாரியப்பன் கென்னடி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவரும் அமைச்சருமான மா.மதிவேந்தன், கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். முன்னதாக மாவட்டத்தில் ஆதிதிராவிட அணி மேற்கொண்ட கழகப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இதனை தொடர்ந்து மாநிலச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ தெரிவிக்கையில் சாதி வேறுபாடு களால் ஒடுக்கப்பட்ட மாந்தர்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் அவர்களது மனித மாண்பை மீட்டெடுப்பதற்காகவும் அறிவாயுதம் ஏந்திய புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய சமூக நீதிப் பாதையின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது திமுக அரசு.

திமுக அரசு 2021ல் பொறுப்பேற்றபின், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை களுக்குக் குரல் கொடுக்கும் வகையில் கடந்த மூன்றாண்டுகளில் “அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி” என்ற நோக்குடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் உயர்த்திடவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடவும் தனிக்கவனம் செலுத்திப் பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது

ஆதிதிராவிட பழங்குடியின சமுதாய இளைஞர்கள் எல்லா இடங்களிலும், எல்லாப் பதவிகளிலும், எல்லாப் பொறுப்புகளிலும் எல்லோருக்கும் இணையாக வீற்றிருந்து பணியாற்றி பொருளாதார நிலைகளாலும், சமுதாய மதிப்புகளாலும், பெருமைகளாலும் உயர்ந்து சிறந்து வருகின்றனர் என்பதைக் காண முடிகிறது

திமுக அரசு என்றும் ஆதிதிராவிட மக்களுக்கு உறுதுணையாகவும் என்றும் இருக்கும்

வருகின்ற 2026 அன்று நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் நமது திமுக அரசு செய்த சாதனைகளை குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கும் பழங்குடியினர் மக்களுக்கும் திமுக அரசு நாள்தோறும் செய்து வர சாதனைகளை அக்கம் பக்கத்திலும் தெரிவித்து மீண்டும் நமது முதலமைச்சரை அரியணை ஏற்போம் என்று உறுதியேற்போம்

234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெறுவதற்கான முக்கிய காரணம் ஆதிதிராவிட நலகுழு அணி தான் என்று நமது பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்

இதைத் தொடர்ந்து துணை முதலமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 2000 நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ தலைமையில் அமைச்சர் மதிவேந்தன் , கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் வழங்கினார்கள் இதில் ஆதிதிராவிட அணி தலைவர்கள் துணைத் தலைவர்கள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் நகர்ச் செயலாளர் சுதாகர், மாவட்ட அமைப்பாளர் ஞானசேகரன் முடிவில் நன்றி கூறினார்கள் .



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளில் ‘மனிதநேய உதயநாள்’ தொடர் நிகழ்ச்சி சென்னை கிழக்கு மாவட்டச்செயலாளர், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி எம்.எஸ்.மைனர்பாபு ஏற்பாட்டில் எஸ்.எஸ்.புரம் பி–பகுதியில் நடைபெற்றது. 300 பயனாளிகளுக்கு திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர், கழக துணை அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி காலை சிற்றுண்டி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு.வி.க.நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் எம்.சாமிகண்ணு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.